ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1368/3 - 2004 නොවැම්බර් 22 වැනි සඳුදා - 2004.11.22

1368/3 ஆம் இலக்கம் - 2004 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்

மேல் மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

மேல் மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவர் இறந்ததன் காரணமாக, மேல்மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (1) ஆம் பிரிவின்கீழ் மேல் மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும்;

அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளார் ஆதலாலும்;

மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. ஆர். பீ. திலிப் குமார ராஜபக்ஷ என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

தேர்தல்கள் ஆணையாளரான தயானந்த திசாநாயக்க ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி, திரு. ஆர். பீ. திலிப் குமார ராஜபக்ஷ என்பவர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான கம்பஹா நிருவாக மாவட்டத்திலிருந்து மேலேயுள்ள மாகாண சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

இராஜகிரிய,
2004, நவம்பர் 22.

12-226